தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு. தா. பொன்னம்பலம்
36, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
போன்: 7493



விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர்23 ஆனி 13 ஷஃபான் 24 இதழ் 133
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-6-1981



சோதிடம்
உங்கள் எதிர்காலத்தை அறிய விரும்புகிறீர்களா? வெளிநாடு செல்லுதல், கல்வி, திருமணம் வியாபாரம், உத்தியோகம் முதலியன. குறிப்புடன் ரூ. 10 அனுப்புக. நேரிலும் சந்திக்கலாம்.
KL. M. KRISHNAPILLAIY
'SRIPARASAKTHI'
சோதிடநிலையம்
68 J, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 0119


# உலகவங்கியிடம் 'அமிர்' உதவி: கோரிக்கை நிராகரிக்கப்பட்டது!

## அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியான தகவல்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு உலக வங்கி, சர்வதேச நாணய நிறுவனம் போன்ற சில சர்வதேச நிதிநிறுவனங்களிடம் நேரடிஉதவி கோரியதாகவும், இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் இலங்கை அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்திருப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து அமைச்சரவை பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான திரு ஆனந்த திஸ டி அல்விஸ் நிருபர்களிடம் தெரிவிக்கையில் கூறியதாவது:

''எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வெளிநாடுகளில் பேசப்பட்டது தொடர்பாகக் கிடைத்த தகவல்கள் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன

''இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் உலக வங்கி போன்ற சர்வதேச நிதிநிறுவனங்களிடம் திரு. அமிர்தலிங்கம் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு நிதி உதவி கோரியதாகவும், இந்த நிதிநிறுவனங்கள் அரசாங்கங்களுக்கு மட்டுமே உதவி வழங்கப்படுவதாகக் கூறி திரு. அமிர்தலிங்கத்தின் கோரிக்கையை நிராகரித்து விட்டதாகவும் அரசுக்கு தகவல்கள் கிடைத்திருக்கின்றன'' என்று தெரிவித்தார். [ம]

## நேற்று முன்தினமிரவு யாழ். நகரில் நடந்த திகில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

கணவனுடன் சென்றுகொண்டிருந்த இளம் மனைவி, சாதாரணஉடையில்வந்தஇருவரினால் இழுத்துச் செல்லப்பட்டு பலாத்காரம் செய்ய முயற்சிக்கப்பட்டதாகப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பெண் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தம்பதிகள் வீதிவழியாகச் சென்றுகொண்டிருந்த போது சம்பந்தப்பட்டவந்த இருவரும் கணவனைத்தாக்கிவிட்டு மனைவியை இழுத்துச்சென்று பலாத்காரம் செய்ய முற்பட்ட போது, கணவர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் மனைவி காப்பாற்றப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாதாரணஉடையில் வந்தவகர்ளால்தாக்கப்பட்ட யாழ். சின்னக்கடையைச்சேர்ந்தவர் யாழ், பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

' வியாழக்கிழமை மாலை

[6ம் பக்கம் பார்க்க]

## கூட்டணி - அரசு உறவு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான அரசாங்கத்தின் எதிர்காலக் கொள்கை பற்றி, விரைவில் தீர்மானிக்கப்படுமென்று நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியுடனான அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று பல அமைச்சர்கள் வினாஎழுப்பியிருந்தனர்.

இதற்குப்பதிலளித்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, தமிழர் விடுதலைக்கூட்டணிதலைமைப்பீடத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையே பல தடவைகளில் நடைபெற்ற பேச்சு வார்த்தை பற்றிக் கூறி புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் கூட்டணி வழங்கியிருந்த ஒத்துழைப்புப்பற்றியும் விளக்

[6-ம் பக்கம் பார்க்க]

இலங்கைத் தமிழர் பிரச்னை:

## "மனிதாபிமான அடிப்படையில் தீர்க்க முழு முயற்சி எடுப்பேன்"

### கருணாநிதிக்கு இந்திரா உறுதி

புதுடில்லி, ஜூன் 26

இலங்கைத்தமிழர் பிரச்னையை மனிதாபிமான அடிப்படையில் தீர்த்துவைக்க இயன்றளவு முழுமுயற்சிஎடுப்பேன் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமிழக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியிடம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சென்ற திரு. மு. கருணாநிதி நேற்று பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து சுமார் அரைமணி நேரம்வரை பேச்சுநடத்தினர்.

இலங்கைத்தமிழர் பிரச்னை வெளிநாடுசம்பந்தப்பட்டதாக இருந்தாலும் அதில்தாம்மிகுந்த கவலை அடைந்ததாகவும் இலங்கையில் விரைவில் அமைதியான சூழ்நிலை நிலவும் என தாம்எதிர்பார்ப்பதாகவும் திருமதிகாந்தி திரு. கருணாநிதியிடம் தெரிவித்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

யாழ். நுண்அலை தொடர்பு நிலையம்:

## கட்டிட வேலைகள் செப்டம்பரில் முடியுமாம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட நுண்அலை தொலைதொடர்பு நிலையக்கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழி வகைகள் குறித்து யாழ் செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வடமாநில தொலை தொடர்புப் பொறியியலாளர், கட்டிடப் பகுதிப் பொறியியலாளர், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், கட்டிட ஒப்பந்தகாரர் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கட்டிடத்தின் முதற் கட்ட வேலைகள் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதியும் இறுதிக்கட்டம் செப்டம்பர் 30ம் திகதியும் பூர்த்தியடையுமெனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது 40 தொழிலாளர்களே வேலை பார்த்து வருவதாகவும் இத் தொகையை 150 பேராக அதிகரிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

[மா-அ


யாழ். நகரில் நவீன வசதிகள் அடங்கிய சைவ உணவு விடுதியகம்
அமுதசுரபி
408, ஆஸ்பத்திரிவீதி-யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக அமைந்துள்ளது.)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லதிலியிலுள்ள கடைத் தளபாட சாமான்கள் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு: வெ யோகீன் வரன், வட்டுக்கோட்டை. 0140

நவசெழு மேற்கு, பொக்கணை வீதியில் மஸ்கஸ் பாம் சமீபமாக, பத்துப் பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்; செ இராஜரட்ணம், "ரோஜா மில்" இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு 0121

புத்தம் புதிய நாஷனல் வீடியோ கசெற் ரெக்கோடர் விற்பனைக்குண்டு (National NV 7600 EM) தொடர்பு கொள்ளவும் ஈ சர்வேஸ் வரன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 0120

## விற்பனைக்கு

புத்தம் புதிய [BRAND NEW] பதிவு செய்யப்படாத [ELF ROOTE VAN] 15 ஆசனங்களைக் கொண்ட வான் விற்பனைக்குண்டு. இதனை நாளையும் திங்களும் விலாசத்தில் பார்வையிடலாம். "பற்றீசியன் இன்ஸ்டிரியூட், 59, சென் பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம். [0133]

குமரகோட்டம் கோண்டாவிலில் 3½ பரப்பு காணியும் சிறிய வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க P. இராசரத்தினம், நெட்டிலிப்பாய், கோண்டாவில். 0114

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் சின்னக் கடைக்கு அண்மையில் பீச் றோட்டில் சகல வசதிகளுடன் கடைகள் வாடகைக்குண்டு ச. துரைரத்தினம், 417, பீச் றோட், யாழ்ப்பாணம். 0122




புங்குடுதீவு அருள்மிகு
புனித அந்தோனியார் ஆலய
வருடாந்த உற்சவம்
கொடியேற்றம்: 10-7-81
வெள்ளிக்கிழமை பி. ப 4 மணி
12-7-81 ஞாயிற்றுக்கிழமை
காலை 8-00 மணிக்கு
விசேட பூசைப்பலியும்
அருள்மிகு புனித அந்தோனியார் திருச்சுருப பவனியும்
இடம்பெறும்.
பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
தினமும் இரவு 8-30 மணிக்கு
வீரமாமுனிவர் நிலைய அரங்கில் சமயக் கலைநிகழ்ச்சிகள்
இடம்பெறும்.

பங்குத்தந்தை வண. அ. ஞானப்பிரகாச அடிகளும்
நிர்வாகக்குழுவும்
புனித அந்தோனியார் ஆலயம்,
புங்குடுதீவு.

0136)


## பகிரங்க அறிவித்தல்

தற்பொழுது மலேசியாவில் இருக்கும் திருமதி கமலாம்பிகை சின்னத்தம்பியும் என்னுடைய மகள் செல்வி பரமேஸ்வரியும் தங்களுக்குரித்தான யாழ்ப்பாணம் பகுதி, வட்டுக்கோட்டை கோவில்பற்று அராலி கிழக்கிலிருக்கும் கீழ்க்காணும்

1. பாலக்கலட்டி பரப்பு 3½ கல்வீடு இரண்டும் குளிர்யும் தளபாடங்களும் வான்பயிர்கள் உட்பட.
2. வியரவி வளவு பரப்பு 3 வான்பயிர் உட்பட
3. பெருமாள் வளவு பரப்பு 3 வான்பயிர் உள்ள
4. சூடுவெந்தான் பரப்பு 4 1/4 எல்லை வடக்கு வேலி, கிழக்கு கோவில் வளவு மற்றும் மேற்கும் கோவில் வீதியும் வான்பயிர்களும்
5. புங்கடி வயல் 1 பரப்பு 2 (குளக்கரை) ) 6
   புங்கடி வயல் 2 பரப்பு 4 (குளக்கரை) )
6. ஈச்சம்பாடு வயல் 1 பரப்பு 10 சிலவைகளும் ) 20
   ஈச்சம்பாடு வயல் 2 பரப்பு 10 சிலவைகளும் )

ஆகியவைகள் அத்தனையும் மேல் கூறிய உரிமையாளர் எனது பெயரில் தந்தவிசேட முழு உரித்தையும் 28-ம் திகதி மாசி மாதம் 1980 ஆண்டு அவ்வூரில் எழுதப்பட்ட 32-ம் நம்பர் தத்துவத்தின்படி எழுதிக்கொடுத்திருக்கின்றனர். இத் தத்துவம் யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில் 10-3-80இல் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது

மேல் கூறிய ஆதனங்களை என் அனுமதியின்றி எவரேனும் குத்தகை கொடுக்கவோ வான்பயிர்களையோ தனங்களை விற்கவோ முடியாது குத்தகையாக எடுக்க விரும்புவோர்கள் மூன்று வருஷக் குத்தகை உறுதி மூலம் எழுதிக் கொடுக்கப்படும் குத்தகைப் பணம் டங்கனி மாதம் 1-ந் திகதிக்குள் கட்டவேண்டும் குத்தகை விடுவதைத் தவிர மற்றுய சகல ஆதனங்களையும் ஒருமித்தோ தனித்தோ கொடுக்கப்படும்.

நா. க சிங்கம்,
இஞ்ஜினியர்,
உவைன் ஏவின் ஏ
கொழும்பு 1.
(0135)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் கேள்விப் பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகளுக்கு இந்நகராட்சி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. சாந்தாளம்பிட்டி சுடலை வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்.
2. ஆறுமுகம் வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்.
3. சிவன்கோவில் வாசல் வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்
4. மருதடி வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்.
5. பொன்னம்பலம் வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்
6. பொற்கொல்லர் வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்.
7. சந்திரடிப் பிள்ளையார் கோவில் வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்.
8. அரசடி வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல்.
9. சங்கப வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல் (வட்டாரம் 6).
10. சங்கம் வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல் (வட்டாரம் 10)
11. மாவிலர் கல்லூரி வீதி, 2ம் முறை தார் ஊற்றுதல்
12. சந்தைய வீதி மிகுதி 2ம் முறை தார் ஊற்றுதல்
13. கைலாசபிள்ளை வீதி 2ம் முறை தார் ஊற்றுதல்
14. நுணுவில் கல்வயல் வீதி 2ம் முறை தார் ஊற்றுதல்.
15. சேனடி வீதி கிரவலிடல்.
16. வீரபத்திரர் மேற்கு ஒழுங்கை கிரவலிடல்.
17. வேரக்கேணி ஆனைக்கோட்டை வீதி கிரவலிடல்.
18. வீரக்கொடிகள் வடல் வீதி கிரவலிடல்.
19. மணங்குணாய் ஒழுங்கை கிரவலிடல்.
20. ஐயா கடை ஒழுங்கை கிரவலிடல்.
21. வேலாயுதபிள்ளை வீதி கிரவலிடல்.
22. சந்தை தெற்குப்பக்க கொட்டகையில் இருக்க நிலமும் செய்பணிடல்

கேள்விப்பத்திரங்கள் 13-7-81ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை இந்நகரசபை அலுவலகத்தில், கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகவும், கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றுக்கும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள், உரித்த உறைக்குள் ஒவ்வொரு வேலைக்கும் தனியாக வைக்கப்பட்டு, அரக்கு முத்திரை இடப்பட்டு, உரித்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலைக்குரிய பெயர் குறிப்பிட்டு, தலைவர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என விலாசமிடப்பட்டு 15-7-81ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை நிச்சயம் யில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் போடப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ இச்சபைக்கு அதிகாரம் உண்டு.

இதுவரைக்கும் இச்சபையில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யாதவர்கள் தாங்கள் அரசாங்க, உள்ளூராட்சி மன்றங்களில் ரூபா 50,000/-க்கு பெறுமதியான வேலைகள் செய்ததை உறுதிப்படுத்தும் பத்திரத்துடன் இவ்வலுவலகத்தில் பதிவு செய்த பின்னர் அவர்களுக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்,

இவ்வேலைகளைப் பற்றிய மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் அறிய விரும்புவோர் அலுவலக நேரங்களில் இச்சபையின் பராமத்து அத்தியட்சரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஏஸ். கே. திரவியநாயகம்
தலைவர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
24-6-1981 0139

## குடும்பச்சண்டை

## ஒருவருக்குக் கத்திக்குத்து

[பண்டத்தரிப்பு]

குடும்பச் சண்டையைத் தொடர்ந்து நபர் ஒருவர் பலத்த கத்திக்குத்துக் காயங்களுடன் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சொக்குவில் மேற்கில் நடைபெற்ற இச்சம்பவத்தில் ரி. சிவலிங்கம் என்பவரை அவரது மைத்துனர் முறையான கே. அமுதலிங்கம் கத்தியால் வெட்டிப் படுகாயம் விளைவித்ததாக ஆனைக்கோட்டைப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லைத்துரை விசாரணையில் ஈடுபட்டுள்ளார்

## பின்னுறுதிக் கட்டளையின் அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜோன் இராசா சூசைபிள்ளை மனைவி வெரோனிக்காவின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்,

சவிரிமுத்து கைம்பெண் றெஜினா, அச்சுவேலி.

—மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்) இல: சி/76.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு ஆடி மாதம் 31-ந்திகதியன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
சு வ கணேசன்,
பதிவாளர்.

1981ம் ஆண்டு ஆனிமாதம் 25ந் திகதி.

வரைதல்
வ மயில்வாகனம்
மனுதாரின் சட்டத்தரணி.
0134

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுன்னாகம் தெற்கு காலஞ்சென்ற முத்துக்குமாரு பொன்னம்பலம் என்பவரது மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

முத்துக்குமாரு பொன்னம்பலம் கைம்பெண் நல்லம்மா சுன்னாகம் தெற்கு சுன்னாகம்

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 95

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 12ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

கட்டளைப்படி

சு வ. கணேசன்
பதிவாளர்

1981ம் ஆண்டு ஆனி மாதம் 23ம் நாளன்று தேதியிடப்பட்டது

என்னுல் வரையப்பட்டது
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
0125

இத அன்ரன் பாலசிங்கம்
சட்டத்தரணி,
பன்னாலை, தெல்லிப்பழை.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழையைச் சேர்ந்த முருகர் மகன் கதிராசி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம்) இல 51/சி

அழகர் சபாபதி தெல்லிப்பழை தெல்மேற்கு.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981-ம் ஆண்டு ஆடி மாதம் 10ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1981ம் ஆண்டு ஆனி மாதம் 1ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
மு நல்லலிங்கம்,
பதிவாளர்.
0132

# இந்திய-அமெரிக்க அணு ஒப்பந்தம் ரத்து?

வாஷிங்டன், ஜூன் 26

இந்திய அணுஉற்பத்தி நிலையத்துக்கு 'யுரேனியம்' வழங்குவதை அமெரிக்கா நிறுத்தும் என்று அமெரிக்க உதவி வெளிநாட்டு அமைச்சர் திரு. ஜேம்ஸ் பக்லின் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைமூலம் இருநாடுகளுக்குமிடையே கடந்த 18 வருடங்களாக அமுலிலிருந்து வந்த 'யுரேனியம்' விநியோகம் தொடர்பான ஒப்பந்தத்தை அமெரிக்கா நீக்கிவிடும் என்று தெரிகிறது.

தராப்பூர் அணு உலைக்கு அமெரிக்க 'யுரேனியம்' வழங்குவது தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையே விரைவில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று வெளிவந்த செய்தியையும் திரு. பக்லின் மறுத்துள்ளார். (இ)

## கல்லூரித்தினம்

[உடுப்பிட்டி]

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் வருடாந்தம் கொண்டாடப்படும் கல்லூரித் தினம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. கல்லூரியின் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் அன்று இடம் பெறும்.

# இந்தியாவில் சீன வெளிநாட்டமைச்சர்

புதுடில்லி, ஜூன் 26

சீன வெளிநாட்டமைச்சர் திரு குவாகுவாங் ஐந்துநாள் உத்தியோகபூர்வவிஜயத்தை மேற்கொண்டு இன்று அதிகாலை புதுடில்லி வந்துசேர்ந்தார். இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. பி.வி.நரசிம்மராவ் இவரை விமானநிலையத்தில் வரவேற்றார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நட்புறவை மேலும் வலுப்படுத்தி ஒத்துழைக்கவேண்டுமென்றும், ஒன்றையொன்று புரிந்துகொள்ளும் வகையில் இருநாடுகளும் நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் திரு குவாகுவாங் விமானநிலையத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

இருதரப்பு உறவுகள், சர்வதேச பிரச்சனைகள் குறித்து இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவுடன் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை சீன வெளிநாட்டு அமைச்சர் திரு குவாகுவாங் நடத்தவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியுடன் சீன வெளிநாட்டமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (வெ)

## பாக். பாதுகாப்பு செலவீனம் அதிகரிப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 26

பாகிஸ்தான் தனது பாதுகாப்புச்செலவீனங்களை 26 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அடுத்தமாதம் 1ம் திகதி முதல் அமுலுக்கு வரும் புதிய வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்துக்கென 1,673 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. (இ)

## உற்சவம்

(அளவெட்டி

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவ விழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

## தமிழ்மக்கள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை அங்கு கடமையாற்றிய டாக்டருக்கு நடந்தவற்றைக் கூறினேன். தானும் சம்பவத்தைப் பார்த்ததாகவும், ஒருவழியாகப் பாதுகாப்பாக வந்துசேர்ந்துவிட்டதாகவும் கூறினார்.

தாம் தாக்கிய ஒவ்வொருவரையும் நோக்கி, அந்தப் பொலிசார் "தமிழ் மக்கள் கொல்லப்படவேண்டும்" என்று சொன்னார்கள். (இ-க)

ஆசிரியர் சம்பளப் பணம்கொள்ளை

# கிளிநொச்சியில் இருவர் கைது!

## துப்பாக்கி, பணம் மீட்பு!!

(கிளிநொச்சி)

பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கூறப்படும் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டு நிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கிளிநொச்சி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஜெயந்தி நகர் 7ம் வாய்க்காலிலுள்ள கிளிநொச்சி இந்து மகா வித்தியாலய ஆசிரியர் சம்பளப்பணம் 25 ஆயிரம் ரூபா கொள்ளையடித்தது, ஆசிரியரைத் துப்பாக்கியால் சுட்டுப் படுகாயப்படுத்தியது ஆகியவை சம்பந்தமாகவே இவ் இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

எட்டாம் வாய்க்காலைச் சேர்ந்த செல்லத்துரை, ஆறுமுகம் (வயது 24) பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த கந்தையா தவபாலன் (19 வயது) ஆகிய இருவருமே இதுதொடர்பாக பொலிசாரால் கைது செய்யப்பட்டவராவர். இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் ஒரு பகுதியான 1900 ரூபாவையும் ஆசிரியரைச் சுட்டுப் படுகாயப்படுத்தியதாகக் கூறப்படும் கைத்துப்பாக்கியையும், கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு செல்வதற்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் சைக்கிளையும் பொலிசார் மீட்டனர்.

எட்டாம் வாய்க்காலிலுள்ள சந்தையில் சந்தேக நபரான செல்லத்துரை ஆறுமுகம் என்பவர் சூதாடிக் கொண்டிருப்பதாகப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. பிரேமதாசா, சார்ஜன்ட்டுகள் இ. பாலசிங்கம், இ. திருவிளங்கம், கான்ஸ்டபிள்கள் திரு. விநாயகமூர்த்தி, திரு. வரதராசா, திரு. குணரத்தினம், திரு. செனிவரத்தின ஆகியோர் அவ்விடத்திற்கு விரைந்து சென்றனர்.

பொலிசாரைக் கண்டதும் சந்தேகநபர் அவ்விடத்திலிருந்து ஓட்டம் பிடிக்கவே பொலிசார் துரத்திச்சென்று கைதுசெய்தனர்.

சந்தேகநபர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப் பட்டபோது இவரது சகாவான கந்தையா தவபாலன் வவனியாவில் தலைமறைவாக இருப்பது தெரியவந்ததாம். பொலிசார் வவனியாவுக்குச் சென்று விசாரணை செய்தபோது அவர் இரவு வேளைகளில் வவனியாவிலுள்ள ரயில் பாதையில் நித்திரை செய்வது வழக்கம் என்பது தெரியவந்துள்ளது.

வவனியாவிலுள்ள ரயில் பாதைக்கு அருகேயுள்ள பற்றை ஒன்றுக்குப் பக்கத்தில் சந்தேகநபரான தவபாலன் நித்திரை செய்வதைக் கண்ட பொலிசார் அவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. டபிள்யூ. கார்த்திகேசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இம் மாதம் 29ம் திகதிவரை அவர்களை நிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் இருவரும் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தமது விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

இக்கொள்ளை சம்பந்தமாக மேலும் நாலுபேரைப் பொலிசார் தேடிவருகின்றனர். கொ,

## சாவகச்சேரி நூலகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கிராமாட்சி மன்ற பொதுசன நூலகம், நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட பேலதிக அரசாங்க அதிபரும், சாவகச்சேரி கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளருமாகிய திரு. மு. பஞ்சலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது. (து)

## கல்வி உலகுக்கு பேரிழப்பு

வட பிரதேச முன்னாள் கல்வி அதிபதி அமரர் எஸ். யு. சோமசேகரத்தின் மறைவு கல்வி உலகிற்கு பேரிழப்பாகும். சிறந்த கல்விமானான அமரர் சோமசேகரம், நாட்டின் கல்வி அபிவிருத்திக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கும், ஆசிரிய உலகிற்கும் அளப்பரிய சேவையாற்றியிருக்கிறார்.

ஆரம்பத்தில் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றிய அவர், லண்டன் சென்று கல்வியில் 'டிப்ளோமா' பட்டம் பெற்றுத் திரும்பினார். இங்கு வந்ததும், கல்வி அதிகாரியாகக் கடமையை ஏற்றுப்பணியாற்றினார். நாட்டின் பல பாகங்களிலும், பெருமபாக கல்வி அதிகாரியாக நீண்டகாலம் கடமையாற்றினார்.

பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்தபோது முதலாவது வடமாநிலக் கல்வி அதிபதியாக அவர் கடமையாற்றினார். அரசாங்கப் பாடசாலைகளின் நிர்வாகத்தை திறம்பட நடத்தி, கல்வி உலகில் எல்லோருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்த இளைப்பாறி அதன் பின், சமயத் தொண்டராக விளங்கினார்.

வடபகுதியில் இன்று சிறந்து விளங்கும் கல்லூரிகளில் பல சிறப்பாக இந்துக் கல்லூரிகளை சிரேஷ்ட பாடசாலைகள் தரத்திலிருந்து, முழுமையான கல்லூரிகளாக தகைமை பெறுவதற்கு உதவிய பெரியார் இவர்.

பல கல்விக் கமிஷன்களில் அங்கம் வகித்து, கல்வி வளர்ச்சிக்கு பல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார். வரலாறு, இலக்கியம், சமயம், சமுதாயத் துறைகளில் ஆழ்ந்த அறிவுபெற்றிருந்தார்.

பிரபல சைவக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், சைவ பரிபாலன சபை போன்ற பல ஸ்தாபனங்கள் மூலம், சமய ஆத்மீகபணிகளில் முன்னின்று உழைத்தார். அன்னாரின் மறைவு கல்வி உலகிற்குப் பேரிழப்பாகும்.

— அன்பர்

## "வன்செயல்களை விசாரிக்க சர்வதேச குழு அமைக்க மாவட்ட அமைச்சர் முயலவேண்டும்"

### பண்டிதர் இரத்தினம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ் சம்பவங்களை விசாரிக்க சர்வதேசஆணைக்குழு நியமிக்கப்படுமாயின் மகிழ்வேன் என்று யாழ் மாவட்ட அமைச்சர் கூறுகிறார். அமைச்சரான அவர் அரசாங்கத்தைக் கொண்டு நியமிப்பதைவிடுத்து நியமிக்கப்படுமாயின் மகிழ்வேன் என்று கூறி யாரை ஏமாற்ற முயல்கிறார்"

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"யாழ்ப்பாண மாவட்டம் காவல்படையினரால் அழிக்கப்பட்டபோது அதைத்தடுக்க முயலாது யாழ்ப்பாண நகரிலே பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்த யாழ் மாவட்ட அமைச்சருக்கு தமிழ்மக்கள் சார்பிலே பேச என்ன உரிமையும் தகுதியும் உள்ளது?

ஊரறிய உலகம் அறிய அரசாங்கத்தின் பொலிஸ்படையினரே கட்டுக்கடங்காமல் யாழ்ப்பாண மாவட்டத்திலே தீயிட்டுச் சூறையாடிப் பழி வாங்கினர். பகற்கொள்ளையடித்தனர் என்பதைப் பாராளுமன்றத்திலே அமைச்சர் ஒருவர் கூறியபின்னரும் யாழ் மாவட்டஅமைச்சர் இத்தனைக்கும் தமிழர்விடுதலைக் கூட்டணியினரே பிரதான காரணமானவர்கள்'' என்று பழிகூறி உண்மையை மன்றத்துத் தப்பமுயல்வது மனிதப் பண்பாகுமா?

யாழ். மாவட்ட அமைச்சருடைய கூற்றுக்களில் 'பெரும்பான்மையினர் அனுபவிக்காத உரிமைகளைக்கூட தமிழ்மக்கள் அனுபவிக்கிறார்கள்' என்பது மிகவும் தவறு இதனைத் திருவாய்மலர்ந்து வெந்த புண்ணில் வேல்பாய்ச்சி இருக்கிறார் மாவட்ட அமைச்சர்.

பெரும்பான்மையினர் அனுபவிக்காத உரிமைகளில் எவற்றைத் தமிழ்மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதைக் கூறுமாறு அவருக்குச் சவால் விடுகிறோம் சமாளிப்பதற்கோ ஏமாற்றுவதற்கோ எவரையும் நாம் அனுமதிக்க முடியாது.'' என்று திரு இரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

### வவனியா எம். பி. கருத்து

பத்திரிகை ஒன்றில் வெளியான யாழ் மாவட்ட அமைச்சர் அறிக்கையில் முக்கியமான பல உண்மைகளை அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார். அதே வேளை ஐக்கிய தேசியக்கட்சி அரசியல் வாதிகளுக்கே உரிய பாணியில் எமது தமிழர் விடுதலைக்கூட்டணி மேல் வலிந்து குற்றம் சுமத்துவதையும் இவர் தவிர்த்துக் கொள்ளவில்லை.''

இவ்வாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார் அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்நகரில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் மிகவும் துர் அதிஸ்டவசமானவை எனவும், இவை ஜனநாயக விரோத சக்திகளால் திட்டமிட்டு செய்யப்பட்ட சதியெனவும் பொறுப்புள்ள அமைச்சர் தயக்கமின்றி கூறுகின்றார். 1977ம் ஆண்டு தொடங்கி இற்றைவரை எமது தமிழர்விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாண மாவட்டத்திலாகிலும்சரி, மற்றைய எந்த மாவட்டத்திலாகிலும்சரி, ஜனநாயக முறைக்கு விரோதமானசெயல் ஒன்றையேனும் செய்ததாக அமைச்சர் ஆதாரத்துடன் கூறமுடியாது"

"யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற அனர்த்தங்கள் அத்தனைக்கும் 1977-ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது மற்றைய மாவட்டங்கள் அனைத்திலும் நடைபெற்ற பாரதூரமான அனர்த்தங்கள் அத்தனைக்கும் பொறுப்பாளிகள் ஆட்சியாளர்களும் அவர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பொலிசார், இராணுவத்தினருந்தான் என்பதையும் அமைச்சர் மறுக்கமுடியாது.''

''தீவிரவாத செயல்கள் பல நாடுகளில் நடைபெறுகின்றன இவர்களைக் கண்டு பிடித்து ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியது ஒரு நாட்டின் ஆட்சியாளரின் பொறுப்பும் கடமையுமாகும். குறித்த இப்பாரிய கடமையைச் செய்வதற்கு திராணியற்று பொலிசாரை கட்டவிழ்த்துவிட்டு அப்பாவி மக்களைக் கொலை செய்து அவர்களது உடமைகளைக் கொள்ளையடித்து நூலகங்களைத் தீக்கிரையாக்குவது அல்ல, ஜனநாயக ஆட்சி முறை."

**வெஸ்லி** (ஹை ஸ்ட்ரீட்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2 30
ராமராவ்-அஞ்சலிதேவி
**ராஜ சேவை**

**நாகம்மாஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-கே ஆர். விஜயா
**தங்கை**

6 வது ஜனத்திரள் வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30 9-45
சிவாஜி, விஜயா
**தர்மராஜா** (கலர்)

**வெலிங்டன்**
யாழ்.
10 30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
**ஆயிரம் ஜென்மங்கள்**

**லிடோ** யாழ். நகர
10 30 2 30, 6-00, 9-30
**அழியாத கோலங்கள்**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**மனோகரா** தினசரி 10-30, 2-15, 4 45, 7-00, 9-30
(யாழ்ப்பாணம்)
**ROCKY**
(Action Film)

**வின்ஸர்** இன்னும் சிலதினங்கள் மட்டும்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-00
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
**ரிஷிமூலம்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
**சங்கிலி**... **பட்டாக்கத்தி பைரவன்**
(வண்ணப்படம்)

**ரஜனி** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
★ ரஜனிகாந்த் ★ ஜெயசுதா
★ ஸ்ரீப்ரியா ★ கமல்
★ [illegible]
மகாராஜா சுரேஷ் கூட்டுத்தயாரிப்பு
**தீ**

A long awaited film that has come to smash all the previous record collection.
**RAJAH** Jaffna Daily 10-30, 2 00, 4-30 7-00 and 9-30



Bruce Lee Fighting his way to fame with his New Martial Arts
Golden Harvest's Presentation of the year
It tells the struggle of an overseas Chinese Leader
BRUCE LEE MARIAYI
Thailand's leading Actress MALARIN
**THE BIG BOSS**
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்
Do not miss Bruce Lee Fighting skills with New Ideas


# இன்றைய பலன்

ஆனிமாதம் 13ம் திகதி
சனிக்கிழமை
(27 - 6 - 81)

மேடம்- வாழ்க்கை திருப்தி நிறைந்ததாகவே இருக்கும். எடுத்த காரியம் இறுதி நிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும், நல்லதைச் செய்தினும் வீண்பழி கேட்க நேரிடும். வெளியிடத்துக் கடிதம் வேதனையைத் தரலாம், நிதானித்தல் வேண்டும்.

இடபம்- இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் கவர்ந்து விடுவீர்கள். பொருள்வரவுக்கும் இடமுண்டு, சுற்றுடலில் மதிப்பு உயரும், பெரியவர்களே உங்கள் ஆலோசனைகளைக் கேட்க முன்வருவார்கள், இறையருளும் உண்டு

மிதுனம்-எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும், சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு, தெய்வநம்பிக்கைவேண்டும்.

கடகம்- அன்னை வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம், பொருள்வரவுக்கும் இடமுண்டு, சிறப்பான தினம்.

சிம்மம்- இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும், எழுத்தாளர்களுக்குப் புதிய படைப்புக்கான கரு கிடைக்கும், நடிகக்கலைஞர்களுக்கு நற்புகழ் உண்டு, பொன்னான தினம்.

கன்னி-எப்பக்கத்திலும் படுகுழி தோண்டுவதற்குப் பகைவர்கள் காத்திருப்பர், மூகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும், ஆயுதபிடைக்கு இடமுண்டு, அவதானம்வேண்டும்.

துலாம்- இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும், இல்லம் பல்கலைக் கழகமாக மாறும், அறிஞர்கள் வருகை உங்களை உற்சாகப்படுத்தும், களஸ்திரவழியாலும் கண்ணியம் சேரும்.

விருச்சிகம்- விஷப் பிட்சையின்மூலம் விபரீதங்களையும், மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம், இன்று சும்மா இருப்பதே சுகம்

தனுசு- உள்ளப்படுதாவில் உலகைக் கூத்தாடும் உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவர்கள். பத்திரிகைத் துறையில் தொழில் புரிபவர் பாராட்டுதல்களைப் பெறுவார்கள்.

மகரம்- எதிலும் முன்னிலையில் நிற்பீர்கள் பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும், சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும் அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வு கிடைக்கும்.

கும்பம்- புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும், புதியவர்களுடைய சேவைகளும் பெருகும், புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும் பூமியால் முன்னேற்றமும் உண்டு

மீனம்- சிந்தனையில் தடுமாற்றம் தென்படும் தண்ணீர் ஓட்டமென பணத்தைக்கொள்ள நேரிடலாம் தொழில் துறையில் மனமுடைவு தொடர்புகளுக்கு இடமுண்டு, முன் யோசனையுடன் நடக்கவும்.

சோதிடகலாநிதி
க. வேலுப்பிள்ளை


**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-தேவிகா
**நீலவானம்**


# றைபிள்குண்டாந்தடியுடன்வந்த காக்கி உடை அணிந்தவர்கள் கடையை நாசம் செய்தனர்

## யாழ். கடை உரிமையாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நாங்கள் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது காக்கிக்காற்சட்டையும் பெனியனும் அணிந்தவர்கள் றைபிள், குண்டாந்தடி ஆகியவற்றுடன் எமது கடைக்குள் புகுந்தவர்கள் கடையில் இருந்த பொருட்களை உடைத்து நாசம் செய்தனர். அவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும்"

யாழ். வன்செயல்கள் பற்றி விசாரணை செய்யும் உயர் மட்ட பொலிஸ் விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த யாழ் மத்திய பஸ்நிலைய ஐங்கரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. கசிரமேலு நித்தியானந்தன் (25 வயது) மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விசாரணை வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிமனையில் இடம்பெற்றது

திரு நித்தியனந்தன் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது; எமது கடை எரிக்கப்பட்டதால் சுமார் 1 லட்சம் ரூபாவரை நட்டமேற்பட்டுள்ளது

தினமும் இரவு 9 30 மணிக்குத்தான் எமது கடையைப் பூட்டுவோம் கடந்த மாசி 31ம் திகதி இரவு 9 மணியளவில் எமது கடையிலிருந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தோம் அப்போ பஸ்நிலையத்திலுள்ள பஸ்களுக்கு அடிக்கும் சத்தம் கேட்டது அதே வேளை எமது கடைவரிசையிலும் கண்ணாடிகள் உடைக்கப்படும் சத்தங்கள் கேட்டன நாங்கள் செய்வதறியாது திகைத்துநின்றோம்.

சில நிமிட நேரத்தில் காக்கி நீளக்காற்சட்டையும், பெனியனும் அணிந்த ஒருவர் கையில் றைபிள் ஒன்றுடன் எமது கடைக்குள் வந்தார் அவரைத் தொடர்ந்து கட்டைக் காக்கிக் காற்சட்டையும், பெனியனும் அணிந்த சிலர் கையில் குண்டாந்தடிகளுடன் எமது கடைக்குள் வந்து, வந்தவர்கள் கடையை விட்டு வெளியே ஓடும்படி எம்மை எச்சரித்தனர். சிலர் கடையை உடைத்தனர். நாம் கடையை விட்டு வெளியே ஓடிவிட்டோம். வெகுதூரத்திற்கு அப்பால் சென்று பார்த்தபோது ஆகாயத்தை நோக்கி நெருப்பு ஜுவாலை பாவுவது தெரிந்தது. தனை மீண்டும் பஸ்நிலையத்தை நோக்கி ஓடிவந்து பார்த்தபோது எமது கடைவரிசை முழுவதும் எரிந்துகொண்டிருந்தது தெரிந்தது என்றார். (கொ)

# லயனல் போபகே கிளிநொச்சி விஜயம்

[கிளிநொச்சி]

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளரும், காலி மாவட்ட அமைப்பாளருமான திரு லயனல் போபகே, இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று சனிக்கிழமை காலை கிளிநொச்சிக்கு வருகிறார்

கிளிநொச்சித் தொகுதி மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்புக்குழு; திரு லயனல் போபகேயின் கிளிநொச்சி விஜயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

திரு போபகே சனிக்கிழமை காலை கிளிநொச்சித் தொகுதியின் மத்திய காரியாலயத்தில் கட்சியின் வாலிபர் சங்கத்தின் பிரதான உறுப்பினருடன் கலந்துரையாடல் நடாத்துவார் மாலை அங்கு நடைபெறும் கருத்தரங்கில் உரையாற்றுவார் ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சிக் கந்தசாமி கோவிலடியிலும், பின்னர் கட்சிக் காரியாலயத்திலும் உரையாற்றுவார். 77ம் ஆண்டு அகதிகளாக வந்து உதயபுரத்தில் குடியேறிய மக்கள் மத்தியில் உரையாற்றுவார் மாலை இரணைமடு, முருகண்டி ஆகிய இடங்களில் உரையாற்றுவார். [கொ]

# வருடாந்தஉற்சவம்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

அடுத்தமாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# ஏழாலையில்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 2ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது ஜூலை மாதம் 6ம் திகதி சப்பறத்திருவிழாவும் 7ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது. (மா-ஜி)

கைவிரல்

# அடையாள அறிக்கை தாமதம்

[புலோலி]

பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் [வயது 15] கொலை வழக்கின் எதிரிகளான சந்தசாமி இராஜ்குமார் [ராஜன்] கல்லது வீரப்பன் அரைத தண்டிரான பொன்சியன் பெருண்டோ ஆகிய இருவரும் கடந்த 24ம் திகதி கைவிரல் அடையாள அறிக்கைக்காக பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்

பருத்தித்துறை பொலிசார் கொழும்பிலிருந்து எதிரிகளின் கைவிரல் அடையாள அறிக்கை இன்னமும் வந்து சேரவில்லை என்று தெரிவித்ததைத் தொடர்ந்து அடுத்த மாதம் 8ம் திகதி எதிரிகளின் கைவிரல் அடையாள அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். [ஜ]

# விநோதன் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் முற்பகுதியில் வட பகுதியில் நிகழ்ந்த மனிதாபிமானமற்ற வன்செயல்கள் ஏற்படுத்திய நட்டங்கள் ஈடுசெய்யமுடியாத தலையாகும். இவற்றுள் யாழ் நூல்நிலையமும், ஈழநாடு பத்திரிகை ஸ்தாபனமும் குறிப்பிடத்தக்கவை. யாழ் நகரிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகையான நடுநிலை தவறாத ஈழநாட்டுக்கு ஏற்பட்ட இழிநிலையை மிகவும் வன்மையாக நானும் நான் சார்ந்த அமைப்பும் கண்டிப்பதோடு முழு நட்டஈட்டினையும் உடன் வழங்கவேண்டுமென அரசினை வேண்டுகிறோம்.

இவ்வாறு யாழ் மாவட்ட சுதந்திரக்கட்சி பிரதம அமைப்பாளர் திரு. குமாரசாமி விநோதன் விடுத்துள்ள செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார். [ந]

‘தியாகர்’ கொலை:

# இரண்டாவது சந்தேக நபரும் பிணையில் அனுமதி

[சுன்னுகம்]

வட்டுக்கோட்டை முன்னுள் எம். பி. தியாகராசாவின் கொலைசம்பவம் தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த மற்றொரு சந்தேக நபரான சங்கரப்பிள்ளை அரியபுத்திரன் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இக்கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களில் முதலாம் மூன்றும் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம்நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்படாத தால் தலா 2000ரூபா ரொக்கப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது தெரிந்கதே.

தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டாவது சந்தேக நபரான சங்கரப்பிள்ளை அரியபுத்திரன் நேற்று மல்லாகம் மாவட்ட பதில் நீதிபதி திரு. வி. பாலசிங்கம்முன்னிலையில்ஆஜர் செய்யப்பட்டார்

‘‘காரைநகரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை அரியபுத்திரன் 25 - 5 - 81 திகதி காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியில் நடைபெற்ற ஐ. தே. க. கூட்டத்தில் இரவு 8 மணியளவில் காலம் சென்ற கலாநிதி ஆ. தியாகராச 'வுக்கு மாலை போடப்பட்டபோது ஐ. தே க. ஆதரவாளரான கருணாகரனிடம் ‘‘இது தான் தியாகராசாவின் கடைசிமாலையும். கடைசிக் கூட்டமும்’’ என்று கூறியதாகவும், அதே தினம் இரவு வட்டுக்கோட்டையில் 10-30 மணிக்குப்பின்னர் திரு. தியாகராசா சுடப்பட்டதாகவும் ஆகவே இக்கொலையில் இரண்டாம் சந்தேக நபருக்கு தொடர்பு உண்டு’’ என்றும் பொலிஸ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக இரண்டாவது சந்தேகநபர் இதுவரை பிணையில் செல்ல அனுமதிக்கப்படவில்லை நேற்று சந்தேக நபர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், மு திருநாவுக்கரசு, இ. த. விக்கினராசா ஆகியோர் இரண்டாவது சந்தேக நபரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரியதைத் தொடர்ந்து நீதிபதி 2000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல 2ம் எதிரியை அனுமதித்தார். வழக்கு விசாரணை ஆகஸ்ட் 25ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ‘‘கொள்ளை அடித்தவர்களை அடையாளம் காட்ட முடியும்’’

## சுன்னுகம் உதவிப் புகையிரத நிலைய அதிபர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

‘‘என்னை அவதூருகப்பேசியவர்களையும், கடையில் கொள்ளையடித்தவர்களையும் அடையாளம் காட்டமுடியும் என்று சுன்னுகம் புகையிரத நிலைய உதவி அதிபர் திரு.ஆர். பாலசிங்கம், உயர்மட்ட பொலிஸ் விசாரணைக்குழுமுன் சாட்சியமளிக்கையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களை யிட்டு, கொழும்பிலிருந்துவந்த உயர்மட்ட பொலிஸ் குழுவில் ஒரு பகுதியினர் சுன்னுகம் பட்டினசபைக் காரியாலயத்தில் சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

புகையிரதநிலைய உதவி அதிபர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

‘‘இம்மாதம் 2-ம் திகதி சிவில் உடையில் வந்த சுமார் 50 பொலிசார் தங்கள் 'வாரண்டு' களைக்கொடுத்து பிரயாணச்சீட்டுகளைப் பெற்றனர். சிலர் றெயில்வேஸ்டேசனுக்குப் பக்கத்திலிருந்த கடைகளுக்குட்புகுந்து சாமான்களை அபகரித்தனர். சிலர் அருகிலுள்ள வீடுகளுக்கும் கற்களால் எறிந்தனர். இச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது றெயில் வந்துவிட்டது. வழக்கம் போல் அறிவித்தல் கொடுத்ததும்றெயில்புறப்பட்டுவிட்டது. அப்பொழுது சிவில் உடையில் நின்ற பொலிசாருக்குத் தலைவர் போலிருந்தவர் என்னிடம் வந்து ‘‘ஏன் றயிலை போக அனுமதித்தீர்’’ என்று கேட்டு என்னைத் தாக்க முயற்சித்தார், அப்பொழுது பார்த்துக் கொண்டிருந்த வேறொருவர் வந்து என்னைத் தாக்கவிடாது தடுத்தார். பின்பு இவர்கள் தங்களது வாறன்டுகளைதிருப்பித்தரும்படி வற்புறுத்தினர். வாங்கிய வாறன்டுகளை திருப்பிக்கொடுப்பது முறையல்ல என்று நான் சொன்னதும், அவர்கள் தூஷணமாக- அவதூறான வார்த்தைகளால் பேசிவிட்டு, வந்துகொண்டிருந்த லொறியொன்றை பலாத்காரமாக மறித்து சென்றுவிட்டார்கள். [மா]

## ‘யோகேஸ்’ கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களின் போது நிர்க்கதியாக்கப்பட்ட தமது வீட்டுக்கு நிவாரணம் அளிப்பதற்காகநிதி சேகரிக்கப்படுவதாகவும், அப்படியாரையும்தாம் நிதி சேகரிப்பதற்காக நியமிக்கவில்லையென்றும் யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக திரு. யோகேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில் தனது இல்லம் பாதிக்கப்பட்டதையிட்டு தனது சார்பில் யாரும் நிதி சேகரிக்க வேண்டாம் என்றும் யாரும் தமது சார்பில் நிதி வேண்டிவந்தால் பணம் கொடுத்துதவவேண்டாமென்றும்’’ கேட்டுள்ளார். [மா]

# ‘‘எனது கடை தாக்கப்படுவதாக மாவட்ட அமைச்சரிடம் கூறினேன்’’

## ஹோட்டல் காசாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

‘‘பயங்கர ஆயுதங்களுடன் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வந்து எனது கடையை தாக்கினர்கள். அச்சமயம் யாழ். பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் நின்ற யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோனிடம் என் கடையை தாக்குகிறார்கள் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே என்றேன். அது பற்றி தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று அவர் என்னிடம் கூறினர்.’’

யாழ். ஆஸ்பத்திரி வீதி 'குட்லக் ஹோட்டல்' காசளார் திரு.கே. எஸ். நாதன்பொலிஸ் உயர் மட்டக்குழுவிற்கு அளித்த சாட்சியத்தில் மேற்கண்டவாறு கூறினர்.

வடபிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் இன்ஸ்பெக்டர் திரு. இராமச்சந்திரன் முன்னிலையில் மேற்படி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. திரு. நாதன் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

‘‘கடந்த மாதம் 31ம் திகதி இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின்மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தல் பிரசாரக்கூட்டத்தைப் பார்த்துவிட்டு சைக்கிளில் எனது ஹோட்டலை நோக்கி வந்து கொண்டிருந்தேன். யாழ் நகரிலிருந்து ஓடி வந்த சிலர் என்னைக் ஹோட்டல் பக்கம் போகவேண்டாமென்றும், யாழ். நகரில் எல்லாருக்கும் அடிவிழுவதாகவும் கூறினர். நான் பருத்தித்துறை வீதியால் விக்டோரியா வீதிக்கு வந்து, அவ்வீதியிலுள்ள யாழ். ஆஸ்பத்திரிப் பின் மதிலால்ஏறி ஆஸ்பத்திரிக்குள் ஓடினேன்.

‘‘இரவு 9-30 மணியளவில் யாழ். புதிய வெளி நோயாளர் பகுதியில்யாழ்மாவட்டஅமைச்சர்திரு. யு. பி.விஜயக்கோன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கிருஷ்ணதாசன் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். அப்போது யாழ். உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திசநாயக்கா எனது ஹோட்டலுக்கு முன் துப்பாக்கியுடன் நின்ருர். நூற்றுக்குமதிகமான குண்டர்கள் எமது ஹோட்டலை வெடி வைத்துத் தகர்க்க முயன்றனர். அப்போது குண்டர்கள் துவக்குகள், குண்டாந்தடிகளும் வேறு ஆயுதங்களும் வைத்திருந்தனர். வெடிவைத்துத் தகர்க்க முயன்ற போதிலும் ஹோட்டல் கதவுகள் உடைபடாது போகவே எனது ஹோட்டலுக்குத் தீமூட்டிவிட்டு பக்கத்துக் ஹோட்டலை உடைத்து உள்ளே சென்று தமக்குத்தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு ஏனைய பொருட்களுக்குத் தீ மூட்டினர்.

## நேற்று

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நானும் மனைவியும் விசுவமடுவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தோம். யாழ் பஸ் நிலையத்திலிருந்து முனீஸ்வரன் வீதி வழியாக சின்னக்கடையிலுள்ள எமது வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தோம் இரவு 9-30 மணியளவில் வெள்ளைநிற நீளக் காற்சட்டையும் மண்ணிற சேட்டும் அணிந்த இருவர் எம்மை வழிமறித்தனர். ஒருவர் என்னைத் தாக்க மற்றவர் எனது மனைவியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு கோட்டை முனீஸ்வரன் ஆலய பிற்பக்கமாகச் சென்ருர்’’ என்று கூறியுள்ளார்.

இவரது புகாரைத் தொடர்ந்து முனீஸ்வரன் ஆலயத்திற்கு விரைந்து சென்ற பொலிஸாரைக் கண்டதும் சந்தேக நபர்கள் இருவரும் பெண்ணை விட்டுவிட்டு ஒடி தலைமறைவாகிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# மகாதேவா தாம்போதி: மீண்டும் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக தடைப்பட்டிருந்த மகாதேவாதாம்போதி வேலைகள் மீண்டும் இன்று சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் செயலத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்ட போது இத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய மேலும் பலதனியார் ஸ்தாபனங்களினதும் தொண்டர் நிறுவனங்களினதும் ஒத்துழைப்புகளைக்கோருவதெனவும் முடிவு செய்யப்பட்டது, இத்திட்டவேலைகள் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். [மா]

## மனிதாபிமான...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கைத்தமிழர் பிரச்னை குறித்து திரு. கருணநிதி இந்தியவெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவுடனும் பேச்சு நடத்தினர்.

## கூட்டணி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறர்.

திரு. அமிர்தலிங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது விவாதம் நடைபெறும்போது எம். பி.க்களும், அமைச்சர்களும் சுதந்திரமாக கருத்து தெரிவிக்கலாம் என்று தெரிவித்த ஜனதிபதி இந்த விவாதத்தின் பின்னர், கூட்டணியுடனான அரசின் எதிர்காலக்கொள்கை பற்றி அமைச்சரவை தீர்மானிக்கும் என்றும் தெரிவித்தார்,

மேற்கண்ட விபரங்களை' அமைச்சரவைப்பேச்சாளரான அமைச்சர் திரு. ஆனந்த திஸநாயக அல்விஸ்வெளியிட்டார். [ம]

## 31ம் நாள் நினைவாஞ்சலி



நாகநாதன் இராமநாதன்

தோற்றம்: 13-3-1937
மறைவு: 27-5-1981

‘‘வாழ்க்கை என்ருல் ஆயிரமிருக்கும்
வாசல்கள் தோறும் வேதனை இருக்கும்
வரும் துன்பம் எதுவென்ருலும்
வாடி நின்ருல் ஓடுவதில்லை
‘‘எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி கிடைக்கும்.
என்ற உண்மையை கடைப்பிடித்து,
அன்பாலே எமையாக்கி தனக்கென வாழாது பிறர்க்கென
வாழ்ந்து பலரும் போற்ற வைத்து எமை ஆருத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எம் அன்புத்
தெய்வமே!

எம் இதயத்தில் நீங்கா இடம் பெற்றுள்ள தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திக்கின்ருேம்.

அன்பான மனைவி, மக்கள், அருமை அண்ணு,
மச்சாள், மாமி, பெருமக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

மகேசவாசம்,
கொடிகாமம்.

0137

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன் எயர்கொண்டிசனிங் - வெல்டிங் மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். 29 - 6 - 81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம் 11, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

0100

## V. R. V.
## போக்குவரத்துசேவை

யாழ் - கொழும்பு சேவை

புதன், ஞாயிற்றுக்கிழமைகளிலும்

கொழும்பு - யாழ் சேவை

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் நடைபெறுகிறது.

கட்டணம்: ரூபா. 55/-

ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்:

யாழ். 1: V.R.V. ருன்ஸ்போட்அலுவலகம், சேகரம் கட்டிடம், கொட்டடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8162

2. றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ், தொலைபேசி; 464, 7889.

கொழும்பு: 271, செட்டியார் தெரு, தொலைபேசி: 32540, 34800.

இப்பத்திரிகை ‘‘ஈழநாடு’’ லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office, Sri Lanka Regd No. QB 100386/81 P. O Box 49. Jaffna. தந்தி: ஈழநாடு தொலைபேசி: 7707